செ.வெ.எண்: 18 /அக்டோபர்/2019 நாள்: 04.10.2019

## செய்தி வெளியீடு

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் அறிவது,**

இந்தியா முழுவதும் அரசு அங்கீகாரம் பெற்று பல்வேறு மாநிலங்களில் செயல்படும் பல்வேறு வங்கிகளில் CRP clerks – IX பணியிடங்களுக்கு Institute of Banking Personnel Selection மூலமாக ஆட்தேர்வு செய்தலுக்கான விளம்பர அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அவ்விளம்பர அறிவிப்பில் தமிழ்நாட்டில் செயல்படும் பல்வேறு வங்கிகளில் 138 காலிப்பணியிடங்கள் முன்னாள் படைவீரர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆன்லைன் மூலம் விண்ணப்பித்திட வேண்டிய இணையதள முகவரி www.ibps.in விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்:09-10-2019. இவ்வரிய வாய்ப்பினை முன்னாள் படைவீரர்கள் அதிக அளவில் பயன்படுத்தி விண்ணப்பித்திமாறும், விண்ணப்பித்த முன்னாள் படைவீரர்கள் அவ்விபரத்தினை திருச்சிராப்பள்ளி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் தெரிவித்திடுமாறும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு:**

4/10/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**